

எஸ்.ஐ.ஆர். தேர்தல் பணிகள் குறித்த மதுரை வடக்கு மாவட்ட இளைஞரணி செயல்வீரர்கள் கூட்டம் மதுரை திருப்பாலை குறிஞ்சி திருமண மண்டபத்தில் நடைபெற்றதில் அமைச்சர் பி.மூர்த்தி ஆலோசனைகள் வழங்கினார். மேலும் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., தனச்செல்வம், வழக்கறிஞர் பாலாஜி, எம்.ஆர்.எம். பாலசுப்பிரமணியம், சோமசுந்தர பாண்டியன், ரோகிணி பொம்மதேவன், ஆர்.கணேசன், மதுரை பாலா, தொகுதி பொறுப்பாளர்கள் சுப.த.சம்பத், ஆனந்த், விஜய கதிரவன், இளைஞர் அணி அமைப்பாளர் எம்.இளங்கோ உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், இளைஞர் அணியினர் பங்கேற்றனர்.



கடலூர் சட்டமன்ற தொகுதி, கடலூர் மாநகர கழக வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள , BLA2 ஆலோசனைக் கூட்டம் கடலூர் மாநகர கழக அலுவலகத்தில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி, கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., மேயர் சுந்தரி ராஜா, கடலூர் மாநகர செயலாளர் கே.எஸ்.ராஜா, தொகுதி பார்வையாளர் சுவை.சுரேஷ், மாவட்ட கழக தொகுதி பார்வையாளர் விக்ரமன்,பொதுக்குழு உறுப்பினர் கே.பி.ஆர்.பாலமுருகன், பகுதி கழக செயலாளர்கள் நடராஜன், சலீம்,வெங்கடேஷன், இளையராஜா, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஜாபர் அலி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

### வடக்கு மண்டல பொறுப்பாளர் - எ.வ.வேலு தலைமையில் - தருமபுரியில்

# வாக்குச்சாவடி முகவர்களுக்கு "சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த (S.I.R) பயிற்சிக் கூட்டம்"!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் அறிக்கை!



தருமபுரி, நவ. 11-

தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், வடக்கு மண்டல பொறுப்பாளர், பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களின் தலைமையில் தருமபுரி மாவட்டத்திற்கு உட்பட்ட ஐந்து சட்டமன்ற தொகுதியில் உள்ள தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) ஆகியோர்களுக்கான சிறப்பு தீவிர வாக்காளர் திருத்த (S.I.R) பயிற்சி கூட்டம் வருகின்ற 13.11.2025 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அரூர், N.N மஹாலில் பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் ஆகியோர் பயிற்சி வழங்கி சிறப்புரையாற்ற உள்ளார்கள்.

அதுசமயம் தருமபுரி மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட பாப்பிரெட்டிப்பட்டி, பாலக்கோடு சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள், பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) அனைவரும் தவறாமல் கலந்துக்கொண்டு பயிற்சி பெற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கழகத் துணைப் பொதுச் செயலாளர் க.பொன்முடி பங்கேற்கிறார்!

# S.I.R. விழுப்புரத்தில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம்!

## தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை!



விழுப்புரம், நவ. 11-

S.I.R. சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடக்கோரி இன்று (11.11.2025) விழுப்புரத்தில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் முன்னாள் அமைச்சர் க.பொன்முடி பங்கேற்று சிறப்புரை யாற்றுகிறார். எனவே இந்தக் கண்ட ஆர்ப்பாட்டத்தில் கழகத் தோழர்கள் திரளாகப் பங்கேற்குமாறு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் SIR சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடக் கோரியும், ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகாரப் போக்குடன் தமிழ்நாட்டில் SIR ஐ செயல்படுத்துவதையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் இன்று (11.11.2025 - செவ்வாய்க் கிழமை) காலை 9.00 மணியளவில் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சி திடலில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக துணை பொதுச்செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ அவர்கள் கலந்து கொண்டு கண்டன உரை யாற்றுகிறார்.

மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட திருக்கோவிலூர், விக்கிரவாண்டி ஆகிய தொகுதிகளில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் அனைவரும் பெருந்திரளாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதசிகாமணி கூறியுள்ளார்

### எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக

# திருப்பத்தூரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!



திருப்பத்தூர், நவ. 11-

திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் எதிரில் இன்று (நவம்பர் 11ஆம் தேதி) எஸ்.ஐ.ஆர்க்கு எதிராக மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருப்பத்தூர் மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்கள், மாவட்ட கழகத்தினர் திரளாக பங்கேற்க வேண்டும் என மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்எல்ஏ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கையில் கூறுகையில் தெரிவித்துள்ளதாவது:-

SIR சீராய்வை தேர்தல் ஆணையம் உடனே கைவிடும் படி தேர்தல் ஆணையத்திற்கு வேண்டுகோள் விடுத்தும் அதனை செவிமடுக்காத ஒன்றிய பாஜக அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சதிகாரப் போக்கில் இந்திய தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வு SIR கொண்டு வந்துள்ளதை கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் இன்று (11ஆம் தேதி செவ்வாய்க்கிழமை) காலை 10 மணிக்கு திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம் எதிரே மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருப்பத்தூர் மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில, மாவட்ட, நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாக கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கடலூர் மேற்கு தி.மு.க. கூட்டணி கட்சிகள் சார்பில் ஆர்ப்பாட்டம்!

## அமைச்சர் சி.வி. கணேசன் தலைமை! சபா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலை!

கடலூர், நவ.11-

கடலூர் மேற்கு மாவட்ட, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் கலந்தாலோசனைக் கூட்டம் நெய்வேலி வட்டம் 25 என்எல்சி தொ.மு.ச அலுவலகத்தில் நடைபெற்றது. கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளரும், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமை தாங்கினார்.

மதச்சார்பற்ற கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா .இராஜேந்திரன் வரவேற்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில், நாட்டில் உள்ள பெரும்பான்மையான அரசியல் கட் சிகள், எஸ்.ஐ.ஆர். சிறப்புத்தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வுக்கு தொடக்கத்தில் இருந்தே எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். எஸ்.ஐ.ஆர் மூலம் தமிழ்நாட்டில் உள்ள உண்மையான வாக்காளர்களின் பெயர்களை பட்டியலில் இருந்து நீக்கப் படுவார்கள்.

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சீராய்வை கொண்டு வந்துள்ளதை கண்டித்து , கடலூர் மேற்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் கடலூர் மஞ்ஞகுப்பம்,தலைமை தபால் நிலையம் அருகில் இன்று 10 மணி அளவில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது எனவும். இதில் கடலூர் மேற்கு மாவட்ட முழுவதிலும் இருந்து கூட்டணி கட்சியினர் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து, பங்கேற்ற வேண்டும் என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தில் காங்கிரஸ் மாவட்ட தலைவர் எம். ஆர். ஆர். இராதாகிருஷ்ணன் எம்.எல்.ஏ, விசிக மாவட்ட செயலாளர்கள் நீதி வள்ளல், திராவிட மணி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் மாதவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் துரை, ம.தி.மு.க மாவட்ட செயலாளர் பிச்சை, மனிதநேய மக்கள் கட்சி மன்சூர், த.வா.க மாவட்ட செயலாளர் அறிவழகன், திராவிடர் கழகம் இளந்திரையன், மூவேந்தர் முன்னேற்ற கழகம் விப்ர நாராயணன் , இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சுக்கூர் பாய், மனிதநேய மக்கள் கட்சி ஷேக் தாவூது, எஸ்டிபிஐ முகமது இர்ஃபான், மக்கள் நீதி மையம் செந்தில்குமார், மனிதநேய ஜனநாயக கட்சி இப்ராஹிம், ஆம் ஆத்மி செந்தில், கழக இலக்கிய அணி துணை செயலாளர் கலைச்செல்வன், திமுக மாவட்ட பொருளாளர் தண்டபாணி, உள்ளிட்ட மதசார்பற்ற கூட்டணி கட்சி நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பண்ருட்டி மணி
### நவம்பர் 11 (1999)



பண்ருட்டி நகரக் கழகச் செயலாளராகவும் – சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த மொழிப் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு 21 முறை சிறை சென்றவர்.

மிசாவில் கைதாகி சென்னை மத்திய சிறையில் ஓராண்டு காலம் சிறைத் தண்டனை அனுபவித்தவர்.

"நிமிர்ந்து நின்றால் வேங்கைப்புலி! சிரித்தால் ஒரு செழிப்பு! பேசினால் ஒரு நேசம், பாசம்! அந்த உருவம் என் கண்ணைவிட்டு என்றும் மறையாது" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### செங்கை சிவம்
### நவம்பர் 11 (2015)



இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக பெரம்பூர் பகுதிக் கழகச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் – தேர்தல் பணிக் குழுச் செயலாளர்– கலை,இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து கழகப் பணியாற்றியவர்.

1989, 1996–ல் பெரம்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

அகில இந்திய கூட்டுறவு வீட்டு வசதி வாரிய தலைவராக பொறுப்பு வகித்தவர்.

"பெரம்பூர் பகுதியில் கழகத்தை வளர்த்த காவலர்களில் ஒருவராகவும் விளங்கி, அருந்தொண்டாற்றிய அருமைத் தம்பி" என்று தலைவர் கலைஞர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**